# BSNL ஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-100** **தேதி :04.12.2011.**

## சென்னை மாநில செயற்குழு முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே!

BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில செயற்குழு சென்னை RGM TTCயில் 03.12.2011 அன்று தமிழ் மாநில தலைவர் தோழர் K.மாரிமுத்து தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய தலைவர் தோழர் VAN நம்பூதிரி, விண்ணதிரும் கோஷங்களுக்கு இடையே நமது சங்க கொடியை ஏற்றி வைத்தார். மாநில உதவி செயலாளர் தோழர் M.நாராயணசாமி அஞ்சலி உரையாற்ற, மாநில செயலாளர் தோழர்.S.செல்லப்பா வரவேற்புரை நிகழ்த்தினார்.

03.12.2011 அன்று நடைபெற்ற சென்னை தமிழ்மாநில செயற்குழுவில் நமது அகில இந்திய தலைவர் தோழர் VAN நம்பூதிரி, அகில இந்திய பொதுசெயலாளர் தோழர் P.அபிமன்யு, அகில இந்திய துணைத்தலைவர் தோழர் புனிதா உதயகுமார், BSNL ஊழியர் சங்கத்தின் சென்னை தொலைபேசி மாநில செயலாளர் தோழர் K.கோவிந்தராஜ், TNTCWU தமிழ் மாநில செயலாளர் தோழர் M.முருகையா, AIBDPA சங்கத்தின் தமிழ் மாநில செயலர் தோழர் CK.நரசிம்மன் ஆகியோர் கலந்துக் கொண்டது சிறப்பம்சமாகும். இந்த செயற்குழுவில் 20 மாநில சங்க நிர்வாகிகளும், அனைத்து மாவட்ட செயலர்களும் முழுமையாக கலந்துக் கொண்டனர்.

தமிழ் மாநில செயற்குழுவை BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய தலைவர் தோழர் VAN நம்பூதிரி துவக்கி வைத்து உரையாற்றுகையில், புதிய ஓய்வூதிய திட்டம், லோக்பால், சில்லரை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீடு, NTP 2011 என்ற பெயரில் மத்திய அரசு வெளியிட்டுள்ள தனியார் ஆதரவு கொள்கைகளை விளக்கி அவற்றிற்கெதிரான நமது போராட்டங்களை தீவிரப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மதிய உணவுக்கு பின் நமது அகில இந்திய துணைத்தலைவர் தோழர் புனிதா உதயகுமார், BSNL ஊழியர் சங்கத்தின் சென்னை தொலைபேசி மாநில செயலாளர் தோழர்.K.கோவிந்தராஜ், AIBDPA சங்கத்தின் தமிழ் மாநில செயலர் தோழர் CK.நரசிம்மன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நமது அகில இந்திய பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு நமது சங்கம் இந்த கால கட்டத்தில் செய்துள்ள, (01.01.2007 க்கு முன்னர் ஓய்வு பெற்ற தோழர்களின் ஓய்வூதிய மாற்றம் உள்ளிட்ட) பல சாதனைகளை விளக்கி நிறைவுரை ஆற்றினார். அதே போல 15, டிசம்பர் 2011 வேலை நிறுத்தத்திற்காக நமது சங்கத்தின் கடுமையான முயற்சியையும், அதன் கோரிக்கைகளையும் மிக தெளிவாக எடுத்துரைத்தார். இதே போல தற்போது மத்திய அரசாங்கம் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை 51 சதவிகிதத்தை அனுமதித்ததை எதிர்த்து நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பை படம் பிடித்து காட்டியதுடன், நமது சங்கமும் போராடும் வியாபாரிகளுக்கு ஆதரவை வெளிக்காட்டியதையும் எடுத்துரைத்தார்.

புதிய பொருளாதார கொள்கைகளுக்கு எதிரான மக்கள் எழுச்சியின் ஒரு பகுதியாக அமெரிக்காவிலும் மற்ற பல நாடுகளிலும் நடைபெற்று வரும் "கைப்பற்றுவோம்" போராட்டங்கள் தொடர்பாக மிகச் சிறப்பாக சித்தரித்தார். நமது கோரிக்கைகளுக்கான போராட்டங்களை சிறப்பாக செய்வதோடு உழைப்பாளி மக்களுடன் இணைந்து அவர்களின் போராட்டங்களையும் வெற்றிகரமாக்கிட நாம் பணியாற்ற வேண்டும் என கேட்டுகொண்டார்.

**மதுரை அமைப்பு சிக்கல்:-**

மதுரையில் ஏற்பட்டுள்ள அமைப்பு சிக்கலை விவாதித்த மாநில செயற்குழு, கீழ்கண்ட முடிவுகளை ஏக மனதாக எடுத்தது.

**அ)** மதுரை மாவட்ட மாநாட்டில் ஒரு சில அமைப்பு சட்ட விதிகள் மீறப்பட்டு இருந்தாலும், தோழர்K.வேலுசாமியை தலைவராகவும் தோழர்.S.சூரியனை செயலராகவும் உள்ள பட்டியலை அங்கீகரிப்பது என மாநில செயற்குழு முடிவு செய்தது.

**ஆ)** அந்த பட்டியலில் உதவி மாவட்ட செயலராக உள்ள தோழர் ரவிசந்திரன் தேர்வு செய்யப்பட்டது நமது சங்க அமைப்பு சட்ட விதிகளுக்கு முரணானது என்பதால் அவரது தேர்வு செல்லாது என முடிவு செய்யப்பட்டது.

**இ)** மாவட்ட மாநாட்டு நிகழ்வுகளை ஒட்டி, மதுரை மாவட்டம் பொது மேலாளர் அலுவலக கிளையிலிருந்து தோழர் M.செல்வராஜன் மற்றும் தோழர் B.சுப்புராயலு, திருமங்கலம் கிளையிலிருந்து தோழர். சுப்புராஜ் மற்றும் எல்லீஸ் நகர் கிளையிலிருந்து தோழர் R.சண்முகவேலு ஆகியோரை சங்கத்திலிருந்து அந்தந்த கிளை சங்கங்கள் நீக்கியது செல்லாது எனவும் அவர்கள் நமது சங்க உறுப்பினர்களாக தொடர்ந்து செயல்படுவார்கள் எனவும் முடிவு செய்யப்பட்டது.

**ஈ)** அதே போல மதுரை CSC யில் புதியதாக கிளை அமைக்கப்பட்டது செல்லாது எனவும், மதுரை CSC கிளையின் கிளை மாநாட்டை டிசம்பர் இறுதிக்குள் கிளை செயலர் தோழர் தனபால் நடத்திட வேண்டும் எனவும் முடிவு செய்யப் பட்டது.

**உ)** நாகர் கோவில் மாநில செயற்குழுவின் முடிவினை மீறிய திருச்சி மாவட்ட செயலாளர் தோழர் C.சந்திரசேகரன் மற்றும் திருநெல்வேலி மாவட்ட செயலாளர் தோழர் சூசை மரிய அந்தோணி ஆகியோரை தமிழ் மாநில சங்கம் கண்டித்தது.

நமது மாநில மத்திய சங்கங்களை விமர்சனம் என்ற பெயரில் அவதூறு பிரச்சாரம் செய்ததற்காகவும், அவதூறு நோட்டீஸ் வெளியிட்டு தமிழகம் முழுவதும் அனுப்பிய காரணத்தாலும், நமது சங்க தலைவர்கள் மீது அவதூறு பிரச்சாரத்தை மேற்கொண்ட காரணத்தாலும், மாநில செயற்குழுவின் முடிவை மீறி செயல்பட்டதாலும், மதுரை மாவட்ட செயலாளர் தோழர் S.சூரியன் மாநில செயற்குழுவிலிருந்து ஒரு வருட காலத்திற்கு 'தற்காலிக நீக்கம்" செய்வது என முடிவு எடுக்கப்பட்டது. (இந்த கால கட்டத்திலும் தோழர் சூரியன் தான் மதுரை மாவட்ட செயலாளர். ஆனால் ஓராண்டு காலத்திற்கு மாநில செயற்குழுக்களில் பங்கேற்க முடியாது).

பின்னர் டிசம்பர் 8 பேரணி, டிசம்பர் 15 வேலை நிறுத்தம், பிப்ரவரி 28 வேலை நிறுத்தம், சில்லரை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீடு, சமீபத்திய பால், பேருந்து கட்டண உயர்வுகள் மற்றும் உத்தேச மின் கட்டண உயர்வு ஆகியவற்றை கண்டித்தும், BSNL பொருட்கள் தடையற்று வழங்க வேண்டும், மாவட்ட/ மாநில மாநாடுகள் உள்ளிட்டவைகளின் மீது தீர்மானம் நிறைவேற்றிய பின் மாநில அமைப்பு செயலாளர் தோழர் S.தமிழ்மணி நன்றி கூற மாநில செயற்குழு நிறைவு பெற்றது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(S.செல்லப்பா)**
மாநில செயலாளர்.

# 03.12.2011 அன்று சென்னையில் நடைபெற்ற BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

01. விருப்ப ஓய்வு திட்டத்தை எதிர்ப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, டிசம்பர் 15 அன்று நமது JOINT ACTION COMMITTEE சார்பாக நடைபெற உள்ள வேலைநிறுத்தத்தை மிகப்பெரிய வெற்றி அடையச்செய்ய வேண்டும். அதற்காக பொதுமக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யும் வகையில் டிசம்பர் 8ஆம் தேதி மாவட்ட தலைநகர்களில் பேரணி நடத்திட வேண்டும். இந்த இயக்கங்களை வெற்றி பெறச்செய்யும் வகையில் மாவட்ட மட்டங்களிலும், கிளை மட்டங்களிலும் கூட்டு நடவடிக்கைக் குழுக்களை உருவாக்கி, ஊழியர்கள் மத்தியில் வலுவான பிரச்சாரத்தை மெற்கொள்ள வேண்டும் என 03.12.2011 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழ் மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

02. INTUC, CITU, AITUC, HMS, BMS, உள்ளிட்ட அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் இணைந்து ஏறி வரும் கடுமையான விலைவாசி உயர்வு, பொத்துறை நிறுவனத்தின் பங்குகளை விற்பது உள்ளிட்ட அரசின் தவறான கொள்கைகளுக்கு எதிராக 2012, பிப்ரவரி 28 தேதிகளில் வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளது. அந்த வேலை நிறுத்த போராட்டத்தையும் வெற்றிகரமாக்கிட வேண்டும் என சென்னையில் நடைபெற்ற தமிழ் மாநில செயற்குழு ஊழியர்களை கேட்டுக் கொள்கிறது.

03. இந்திய நாட்டில் உள்ள 11 கோடி மக்களின் வாழ்வை பாதிக்கும் வகையில் சில்லரை வர்த்தகத்தில் 51% அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும் முடிவை தமிழ் மநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது. இந்த முடிவை மத்திய அரசு திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும் என இந்த தமிழ் மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

04. உள்ளாட்சி தேர்தல்கள் முடிந்தவுடன், தமிழக ஆட்சியாளர்கள் ஏழை எளிய மக்களின் மீது கடுமையான சுமையில்னை சுமத்தி உள்ளனர். பால் கட்டணம், பேருந்து கட்டணம் ஆகியவற்றை கடுமையாக உயர்த்தியதுடன், மின் கட்டணத்தை கடுமையாக உயர்த்த வேண்டும் என மின்வாரியத்திற்கு சிபாரிசு செய்துள்ளது. ஏற்கனவே கடுமையான பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள தமிழக மக்களை காப்பாற்றும் வகையில் இந்தக் கட்டண உயர்வினை தமிழக அரசு ரத்து செய்ய வேண்டும் என 03.12.2011 அன்று சென்னையில் நடைபெறும் தமிழ் மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

05. தமிழகத்தில் தற்போது BSNL பொருட்களின் வினியோகம் என்பது தேவைக்கேற்ப இல்லை. இந்த குறைபாட்டை நீக்கி தேவைக்கேற்ப சிம் கார்ட் உள்ளிட்ட BSNL பொருட்களை வினியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என தமிழ் மாநில நிர்வாகத்தை தமிழ் மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

06. நமது அகில இந்திய சங்க கட்டிடத்தின் பதிவு 08.12.2011 அன்று நடைபெற உள்ளது என்பது நமக்கு தெரியும். சங்க கட்டிட திறப்பு விழாவையொட்டி ஒரு சிறப்பு மலர் வெளியிட நமது மத்திய சங்கம் முடிவு செய்துள்ளது. அதற்காக ஒவ்வொரு மாவட்டமும் ரூ.5000/-க்கான விளம்பரத்தை உடனடியாக அளிக்க வேண்டும் என மாநில செயற்குழு மாவட்ட சங்கங்களை கேட்டுக் கொள்கிறது.

07.புதிய பென்சன் மசோதாவிற்கு எதிராக பெருமளவில் கையெழுத்து இயக்கத்தை நடத்தி மத்திய சங்கத்திற்கு அனுப்பி வைத்த மாவட்ட/கிளை சங்க நிர்வாகிகளுக்கும், அனைத்து ஊழியர்களுக்கும் தமிழ் மாநில செயற்குழு தனது பாராட்டுதல்களை தெரிவித்து கொள்கிறது.

08. நமது தமிழகத்தில் கடுமையான மழையாக இருந்த போதும், நமது சங்கத்தின் தலைமையிலான UNITED FORUM அறைகூவல் விட்டிருந்த 18.11.2011 தர்ணா, மற்றும் 28,29-11-2011 ஆகிய நாட்களில் தொடர் உண்ணாவிரதம் ஆகியவை அனைத்து மாவட்டங்களிலும் மிக சிறப்பாக அமுல் படுத்தப்பட்டன. இதில் பங்கேற்ற, இதற்காக உழைத்திட்ட அனைவருக்கும் தமிழ மாநில செயற்குழு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

09. தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட சங்கங்களும் தங்களது மாவட்ட மாநாடுகளை (நடைபெற வேண்டிய கிளை மாநாடுகளை முறையாக நடத்தி முடித்துவிட்டு) மார்ச், 2012க்குள் நடத்தி முடித்திட வேண்டும் என தமிழ் மாநில செயற்குழு கேட்டுக் கொண்டது.

10. நமது 6ஆவது தமிழ் மாநில மாநாட்டினை எதிர்வரும் ஜூன் முதல் வாரத்தில் திருப்பூரில் நடத்துவது எனவும் தமிழ் மாநில செயற்குழு முடிவு செய்துள்ளது.

11. மிக குறுகிய காலத்தில் மாநில சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க சென்னை RGM TTC யில் இந்த மாநில செயற்குழுவை மிக சிறப்பாக ஏற்பாடு செய்த சென்னை CGM(O), சிவில் பகுதி மற்றும் CGM Project மாவட்ட சங்கங்களை தமிழ் மாநில செயற்குழு மனதார பாராட்டியது.

* * * * * *